# முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௫ ௩0 1 ௫௯ வெள்ளி ஒலி: ௨




# எது சினிமாக் கட்சி

"தி. மு. க. வினர் நாட்டின் பிரச்னைகளைக் கவனித்துப் பரிசீலிப்பதில்லை. சினிமாவுக்குக் கதை எழுதுவதின் மூலமும்: நாடகம் போடுவதின் மூலமும் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது!"

—இவ்வாறு கனம் முதல மைச்சர் காமராசர் பேசியிருக்கிருர்.

எங்கே?

'தென்னுட்டின் ஹாலிவுட்' என்று அழைக்கப்படும் கோடம்பாக்கத்தில் — வட பழனி பஸ் நிலையத்திற்கு அருகில்!

"காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா"—என்று உடல் வளர்க்கப் பிச்சைக்காரன் பாடுவதைப்போல்; தமிழகத்தின் படத் தொழிற்சாலைகளுக் கருகில் கூட்டம் நடத்தி—தி. மு. க. காரர்களை சினிமாக் கட்சிக்காரர்கள்—என்று தாக்குதல் நடத்தியிருக்கிருர்.

வழக்கமாக திருவல்லிக்கேணி கடற்கரையிலே கோலாகலமாகக் குடியரசு தினத்தைக் கொண்டாடுபவர்கள் இந்த ஆண்டு மட்டும் சென்னையின் ஒரு கோடியிலிருக்கும் கோடம்பாக்கத்தில் கொண்டாடுவானேன்?

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று; திருவல்லிக்கேணி கடற்கரையில் கனம் அமைச்சர்கள் பிரசங்கம் செய்தால் அங்கே போதுமான கூட்டம் கூடுவதில்லை. அடுத்து; கோ...பாக்கத்திலே கூட்டம் ...தால், படத் தயாரிப்பு ...வகள் நிறைந்த அந்த ...ரத்தின் மதிப்பை இப் ...துதான் அமைச்சர்கள் ...விருர்கள்!

—எப்படியோ அமைச்சர்கள் செல்லுமிடமெங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சினி...க் கட்சி என்று சொல்வதற்குத் ...ங்குவதில்லை.

—இதற்கு அவர்கள் காட்டு...ன்ற காரணம் நாடகத்தையும், சினிமாவையும் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்த முடியும் என்கிற ...கத்தின் நம்பிக்கையும்; அதில் ...க்குக் கிடைத்திருக்கிற வெற்றியும்; நம்மிடையே நடிக நண்பர்கள் சிலர் இருப்பதும்தான்!

ஒரு கட்சியிலே நெசவாளர்கள் சிலர் இருந்தால் அதை நெசவாளர் கட்சி என்று கூறுவதில்லை.

ஒரு கட்சியிலே விவசாயிகள் சிலர் இருந்தால் அதை விவசாயிகள் கட்சி என்று கூறுவதில்லை.

ஒரு கட்சியிலே டாக்டர்கள் சிலர் இருந்தாலோ — இஞ்சினியர்கள் இருந்தாலோ—அதை டாக்டர்கள் கட்சி என்றோ —இஞ்சினியர்கள் கட்சி என்றோ கூறுவது கிடையாது.

ஆனல்; தி. மு. க.வில் அங்கம் வகிப்பவர்களில் ஒரு சிலர் பட உலகின் பல துறையைத் தொழிலாகக் கொண்டிருக்கிருர்கள்—என்கிற ஒரே காரணத்துக்காக கனம் அமைச்சர்கள் முதல் சாதாரணக் காங்கிரஸ் குல்லாக்கள் வரை நம்மை சினிமாக் கட்சி—என்று தாக்குவதற்கு முனைகிருர்கள்.

கழகத்தை இப்படித் தாக்குபவர்கள் தங்களது கட்சியை எப்படி நடத்திக் கொண்டு வருகிருர்கள்?

வடநாட்டுக் காங்கிரசின் வரலாற்றைப் புரட்டுங்கள்—சினிமாக்காரர்களின் நட்பு இல்லாமல்—அல்ல; அல்ல; அவர்கள் கொண்டிருக்கும் உறவை நட்பு என்றுகூடக் கூறமுடியாது சினிமாக்காரர்களின் தயவு இல்லாமல் அவர்களது தேர்தலோ; மாநாடுகளோ நடந்தது என்ருல் அவை விரல் விட்டு எண்ணக் கூடியவைகளாகத்தான் இருக்கும்!

கேரளத்திலே பிறந்து வளர்ந்த கிருஷ்ணமேனன் பம்பாய் தொகுதியிலிருந்து பாராளு மன்றத் தேர்தலுக்குப் போட்டியிட்டாரல்லவா? அப்போது அவருக்கு ஓட்டு சேகரிப்பதற்காக நடத்தப்பட்ட கூட்டங்களிலே பம்பாயின் பிரபல சினிமா நட்சத்திரங்கள் கலந்து கொண்டிருக்கிருர்கள்! ராஜகபூர், நர்கீஸ் போன்ற பெரிய பெரிய நட்சத்திரங்களைக் காட்டித்தான் கிருஷ்ண மேனனல் ஓட்டு சேகரிக்க முடிந்தது!

அவ்வளவு ஏன்? அண்மையில் நாகபுரியிலே காங்கிரஸ் மாநாடு கூடிற்றே; அப்போது நடந்தது என்ன?

எதிர்க் கட்சிகளைச் சினிமாக் கட்சி என்று ஏசுகிருர்களே; அத்தகைய காங்கிரஸ் கட்சிக்காரர்கள் சினிமாத் தொடர்பு கொண்டவர்களை உள்ளே வர வேண்டாமென்று தடுத்து நிறுத்தினர்களா? வேண்டுமானல் பார்வையாளர்களாகப் பந்தலுக்கு வாருங்கள்; மேடையிலே மட்டும் ஏறிவிடாதீர்கள்—என்று உத்தரவு போட்டார்களா?

இல்லை!

ஜனவரி 11-ம் தேதியன்று தேவ் ஆனந்த் (பிரபல கதாநாயகர்), ஐ. எஸ். ஜோஹர் (நகைச்சுவை நடிகர், டைரக்டர்), பிமல் ராய் (டைரக்டர், பட முதலாளி), முகேஷ் (பின்னணிப் பாடகர்), சலில் சௌத்ரி (சங்கீத டைரக்டர்), ஜானி வாக்கர் (நகைச்சுவை நடிகர்), மற்றும் பிரபல நடிகைகளான வகிதா ரெஹ்மான், நிருபா ராய், ஷம்மி, ஸ்மிருதி பிஸ்வாஸ்—போன்றவர்களை ஏற்றிக் கொண்டு பம்பாயிலிருந்து நாக்பூருக்கு ஆகாய விமானம் பறந்தது.

அங்கே; நர்க்பூர் விமானக் கூடத்திலே இந்த நட்சத்திரங்களை 20,000 பேர் கொண்ட ஜனத்திரள் வரவேற்றதாம்!

பிறகு சங்கீத டைரக்டர் சி. ராம்சந்திரா, நடிகைகள் மாலா சின்ஹா, நளினி ஜயவந்த், உஷா கிரான்—உள்ளிட்ட கோஷ்டியும் அவர்களோடு சேர்ந்து கொண்டு; மாநாட்டுப் பந்தலுக்குப் பயணமாயிற்றும்!

பிறகு மாநாட்டுப் பந்தலிலே சினிமா நடிகர்கள் இசைக் கச்சேரிகளையும், நாட்டியங்களையும், ஓரங்க நாடகங்களையும் நடத்திக் காட்டினர்களாம்!

— நாக்பூர் காங்கிரஸ் பந்தலிலே நடைபெற்ற இதற்குப் பெயர் கலாச்சாரத் திருவிழாவாம்! இது பம்பாய் மாநிலத்தில் சிறு சேமிப்புத் திட்டத்தை விருத்தி செய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாம்!

மாலையில் பாதுகாப்பு அமைச்சர் கிருஷ்ண மேனனும், பிரதமர் நேருவும் பந்தலுக்குள் வந்து நடிகர்களை அறிமுகம் செய்து கொண்டார்களாம்!

அப்போது ஒவ்வொரு நடிகரும் நடிகையும் பண்டிதருக்குப் பூமாலை சூட்டி தங்களது மரியாதையைக் காட்டிக் கொண்டார்களாம்!

—இந்தக் கலாச்சார விழாவை மக்களோடு மக்களாக உட்கார்ந்து வேடிக்கை பார்த்தவர்கள் யார் தெரியுமா?

பண்டித நேரு; கிருஷ்ண மேனன்; பம்பாய் முதலமைச்சர் சாவன்; இன்னும் பிரபல காங்கிரஸ் தலைவர்கள் பலர்!

—மொத்தத்தில் தலைவர்களின் பேச்சு கேட்பதற்காக நாக்பூர் காங்கிரஸ் மாநாட்டிலே கூட்டமே இல்லையாம்! மைதானத்தின் பெரும் பகுதி காலியாகவே இருந்ததாம்!

—இருந்தும் இந்தக் கலாச்சாரத் திருவிழாவிற்கு மட்டும் கொட்டகைக்கு உள்ளே ஒரு லட்சம் பேரும்; வெளியே சுமார் ஒரு லட்சம் பேரும் திரண்டிருந்தார்களாம்!

—இப்படிக் கூட்டம் கட்டுக்கடங்க முடியாதபடி பெருத்து விட்ட காரணத்தால்தான் வழக்கமாக நீண்ட நேரம் பேசும் பண்டிதநேரு இரண்டே நிமிஷத்தில் தன் வரவேற்புரையை முடித்துக் கொண்டாராம்!

சினிமா நட்சத்திரங்களின் இசையும், கூத்தும் முடிவுக்கு வரும் கட்டத்தில் கூட்டத்திலே நெருக்கடி ஏற்பட்டதாம். எல்லோரும் நட்சத்திரங்களைப் பார்ப்பதற்காக மேடையை நெருங்கிக் கொண்டிருந்தார்களாம்.

அந்த நெருக்கடியான நேரத்திலே சங்கீத டைரக்டர் சி. ராம்சந்திரா தனது இசைக் கச்சேரியைத் துவக்கினராம். அதன்

[தொடர்ச்சி பக்கம்—7]



நாக்பூர் காங்கிரசில் நடிக நடிகையர் புடைசூழ இந்த நாட்டின் காவலர்! பண்டிதரைச் சுற்றி வகிதா ரஹ்மான், நூ... உஷா கிரான், நளினி ஜெயவ... மாலா சின்கா, ஜபீன், நிரு... ராய், ஸ்மிருதி பிஸ்வாஸ், ... சலா சசிதேவ்-முதலிய நடி... களையும்--ஜானிவாக்கர், முக்... ஆகிய நடிகர்களையும் காணல...




வெள்ளி 30—1—59 சென்னை

# தியாகப் பிச்சை!

**வா**ன வேடிக்கைகள் கண்ணைப் பறித்தன—வெடிச் சத்தம் காதைக் குடைந்தது—அலங்கார மின்விளக்குகள் அற்புதமாய்ப் பிரகாசித்தன—படை அணி வகுத்தது—பட்டொளி வீசிப் பறந்த பாரதத் தாயின் மணிக் கொடிக்கு அஞ்சலி செய்யப்பட்டது—உலகெங்கிலுமிருந்தும் வாழ்த்துக்கள் குவிந்தன!

ஆமாம்; இந்தியக் குடியரசு தினம் வந்து போயிற்று!

அந்நியர் அழுத்தியிருந்த அடிமை நுகத்தடியைத் தூக்கி எறிந்து ஒன்பது ஆண்டுகள் உருண்டோடிவிட்டன!

வெள்ளைத் துரைத்தனத்தை எதிர்த்து நடந்த வீரமிக்க போராட்டம் நினைவுக்கு வந்தது அந்நேரம். தாயக விடுதலைக்காக கண்ணீர் சிந்தியோர்-அது வற்றிய பிறகு செந்நீர் சிந்தியோர்-இவர்களின் பட்டியல் படித்துக் காட்டப்பட்டது. துடிப்புமிக்க தேச பக்தர்கள் மரணத்தின் பிடிப்பிலே சிக்கிய சோக வரலாறும், தூக்குக் கயிறும் துப்பாக்கிக் குண்டுகளும் அதிகாரத்தின் துணையோடு பவனி வந்த பயங்கரச் சம்பவங்களும் மீண்டுமொருமுறை நெஞ்சிலே தோன்றி மறைந்தன.

"குடியரசு வாழ்க!"—நாடாள்வோர் கொக்கரித்தனர்.

"என் குடி முழுகிவிட்டதே!"—மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்துபோன 'இந்த நாட்டு மன்னன்' குமுறினன்!

"சாதனையோ சாதனை!" என்று ஒன்பதாண்டு கால சுதந்திர வாழ்க்கையை வர்ணித்தனர் நாடாள்வோர்; பசி வேதனையால் காதடைத்துப்போன பஞ்சைகளின் முன்பாக!

ஆயிரக் கணக்கான உயிர்களால் அபிஷேகம் செய்யப்பட்ட ஆட்சி பீடத்தில் இன்று வீற்றிருக்கின்ற அமைச்சர் பெருமக்கள், குடியரசு தினத்தைக் கோலாகலமாகக் கொண்டாடினர். குமுறிக் கொண்டிருக்கும் உள்ளத்து வேதனைக்கும் இடையில் ஒருமுறை சிரிக்க முயற்சித்துத் தோற்றான் இந்த நாட்டு ஏழை!

"இன்று நாமே சுயமாக உவந்தளிக்கும் சேவை எதிர் காலத்தில் இன்னும் அதிகப் பலனை அனுபவிக்கச் செய்யும். இந்தியா இளம் பருவத்தில் இருக்கும் குடியரசாக இருந்த போதிலும், அதன் வளர்ச்சியின் வேகம் நமக்கும் பெருமைதான் தருகிறது! இருந்தாலும், நாம் கனவு காணும் இந்தியாவை நிர்மாணம் செய்வதற்கு நாட்டு மக்கள் இன்னும் **தியாகம்** செய்ய முன் வர வேண்டும்...!"

—இந்த நாட்டு மக்களுக்கு குடியரசு தினத்தன்று இந்தியத் தலைவர் இராஜேந்திர பிரசாத் இப்படி அறைகூவல் விடுத்திருக்கிறார்!

நாம் கனவு காணும் இந்தியாவை நிர்மாணிக்க நாட்டு மக்கள் இன்னும் தியாகம் செய்ய வேண்டுமாம்!

நாட்டு விடுதலை, கனவாக நினைக்கப்பட்டது ஒருநாள்—அந்தக் கனவை நினைவாக்க தியாகமும் தேவைப்பட்டது—இரத்தச் சகதியிலே விடுதலை மலர்ந்தது!

இன்று அதே நாடு சுபிட்சம் நிறைந்த நாடாக மாறுவதற்குக் கனவு காணப்படுகிறதாம்——அந்தக் கனவை நினைவாக்கவும் தியாகம் தேவையாம்—இராஜேந்திரர் மக்களிடையே தியாகத்தைத் தேடுகிறார்!

இந்தியக் குடியரசிலே அமைதியை—நிம்மதியான வாழ்வைத் தேடி ஏமாந்த மக்களிடம் மீண்டும் 'தியாக பேரம்' நடத்தப்படுவது கொடுமையிலும் கொடுமைதான்!

இந்திய உப கண்டத்தின் அரசியலமைப்பு தயார் செய்யப்பட்டு, புது ஆட்சி ஆரம்பித்த அன்றைய தினமே இடியும் மின்னலும் இந்த நாட்டு மக்களை எதிர் நோக்கிவிட்டது; இன்னலும் துன்பமும் இறுகத் தழுவிக் கொண்டது; காங்கிரஸ் கட்சியின் சுயநல—சுக போகச் சட்டம் நல்வாழ்வளிக்கும் கருவியாகத் தென்படவில்லை. கைகளுக்கு விலங்குபோல்—கால்களுக்குக் கட்டுபோல்—உரிமை வாழ்க்கையிலே வீசப்பட்ட சூறாவளிபோல் தென்பட்டது!

அந்த சட்டத்தின் காவலர்களோ—சமுதாய துரோகிகளாய் மக்கள் மன்றத்தின் முன் நிற்கிறார்கள்!

குடியாட்சி படுகுழியிலே விழுந்துவிட்ட கொடுமையைத்தான் அரசாங்கத்தின் தூண்களாக இருப்பவர்களின் துப்பு கெட்ட துரைத்தனம் பறைசாற்றுகிறது!

நாட்டு மக்களிடையே மீண்டும் தியாகம் வேண்டுகின்ற இந்தியத் தலைவரின் பார்வைக்கு இந்த அவல சர்க்காரின் அன்றாடக் கொடுமைகளைக் கணக்கின்றிக் குவிக்கலாம்; சமீபத்தில் கிடைத்திருக்கிற வேதனை நிகழ்ச்சிகள் நல்ல உதாரணங்களாகத் தோன்றுகின்றன!

தொழில் துறையில் பாரதம் மின்னல் வேகத்தில் முன்னேறுகிறது என்று வாய்ப்பறை அடிக்கின்றனர் ஆட்சியினர். ஆனால் அவர்களால் துவங்கப்பட்ட ரூர்கேலா உருக்குத் தொழிற்சாலைத் திட்டமோ, இலட்சக் கணக்கான ரூபாய்களை ஊழல் என்ற திமிங்கிலத்தின் வயிற்றுக்குள் திணிக்கின்ற 'கொலை பாதக'த் திட்டமாகக் காட்சியளிக்கிறது. அதன் சோக வரலாறு, அரசினரின் வெட்கக்கேடான நிர்வாகத்தைத்தான் பறைசாற்றுகிறது.

**211** கோடி ரூபாய் செலவில் மேற்கு ஜெர்மனியின் உதவியோடு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு ஒரு சமயம் **60** இலட்சம் ரூபாய் பெறுமான பெரிய இயந்திரம் ஒன்று தேவைப்பட்டது. ஏழையர் நாடு இந்தப் பெருந் தொகையை ஒரே இயந்திரத்துக்காகக் கொட்டிக் குவிக்க முடியாது என்று திட்டமிட்டு, அதே இயந்திரத்தை வாடகையில் வாங்கினார்கள்!

வாடகைத் தொகை எவ்வளவு தெரியுமா? **50**. இலட்சம் ரூபாய்!

**10** இலட்சம் ரூபாய் மிச்சம் பிடிப்பதாகக் கருதிப் பெறப்பட்ட அந்த இயந்திரம் பழுதடைந்தது—குப்பையிலே தூக்கி எறிய வேண்டியது—என்று பின்னால்தான் தெரியவந்தது. ஆகவே அதை பழுது பார்க்க **15** இலட்சமும், புதிய உறுப்புகள் மாற்ற **10** இலட்சமும் செலவழித்திருக்கிறார்கள்!

**60** இலட்சம் ரூபாய் கொடுத்து புதிய இயந்திரம் வாங்க பயந்தவர்கள், பழைய இயந்திரத்தை வாடகைக்குப்பெற்று **75** இலட்சத்திற்குக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள்!

அதுமட்டுமல்ல; இந்தத் தொழிற்சாலை கட்டுவதற்கு ஜெர்மனுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் ஒரு சிறு தவறுக்கு இடம் கொடுத்து விட்டார்களாம்! அந்தச் சிறிய தவறுதான், **45** இலட்ச ரூபாய் நஷ்டத்துக்குக் காரணமாகிவிட்டது!

மேலும், மத்திய கலால் இலாக்காவினர் ஒரு மோட்டார்ப் படகைக் கட்டினார்கள். அதற்கான செலவு **6,28,000** ரூபாய்! ஆனால் படகு தயாரானபின் ஓட்டிப் பார்த்ததில் அதன் வேகம் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இல்லையாம்; உடனே அதை விற்று விட்டார்கள், **5,17,000** ரூபாய்க்கு! இந்த 'வியாபார'த்தில் ஏற்பட்ட நஷ்டம் ரூ **1,11,000**!

குடியரசைக் காத்து வருகின்ற கோலேந்திகள், சென்ற ஒன்பது ஆண்டு காலமாக இப்படி விரயமாக்கும் கோடிக் கணக்கான ரூபாய் யாருடையவை? இள வயது இந்தியா வேகமாக முன்னேறிவிட்டது என்கிறாரே இந்தியத் தலைவர்—அந்த இந்திய உப கண்டத்திலே சிதறிக் கிடக்கின்ற **40** கோடி மக்களுடைய உழைப்பு — வியர்வை — இரத்தம் — இவை சேர்த்த வெள்ளி காசுகள்தான்!

வற்றிய அடிவயிறு வறுமைத் தீயால் பற்றி எரிந்தாலும்—உழைப்பு பெற்றெடுத்த செல்வத்தை வரிக்கென்று வாரித் தருகின்ற இந்நாட்டு ஏழையர் குலம், இந்தக் கொடுமைகளைக் கண்டு குடியரசை வாழ்த்தவா செய்யும்?

உள்ளத்தால் குமுறிக் கொண்டிருக்கும் அவர்களிடம்தான் உதட்டில் புன்னகையோடு 'தியாகப் பிச்சை' கேட்கிறார் இந்தியத் தலைவர்!

தியாகம் செய்யாமலா இருக்கிறார்கள் அவர்கள்?

விடுதலைக்கு முன் செய்த தியாகம் இரத்த ஆறாக ஓடிற்று—அதிலே குடியாட்சி மலர்ந்தது!

இன்றும் தங்களது உழைப்பை—உழைப்பால் கொட்டும் உதிரத்தைத் தியாகம் செய்கிறார்கள்-ஆனால் இதிலே குடியரசைக் கொலைக்கின்ற ஆதிக்கத்தை வெட்டி வீழ்த்தும் கொடுவாள்தான் முளைக்கிறது!

ஃ

# கண்ணீர்

முல்லை சத்தி

மாலைக் கதிரவன் மலை வாயிலில் குப்புற விழுந்துகொண்டிருந்தான். சோலையை நோக்கிப் புள்ளினங்களும், சிம்புட்பறவைகளும் பறந்துகொண்டிருந்தன. வாலைக் குமரிகள் கையிலே அணிந்திருந்த வளையல்கள் கல கலவென நகை முழக்கம் எழுப்ப, இடை சுமந்திருந்த தண்ணீர்க் குடம் சலசலவென இசை பாட, கால்கள் ஜதித் தாளம் போட, வீடு நோக்கி நடை போட்டனர். 'மலர்க் கொத்தோ ?......வளர் நிலவோ' எனக் காட்சி அளிக்கும் மதிவதனங்களில் மகிழ்ச்சி இல்லை; பொலிவில்லை! விழிகளிலே ஏக்கம்; மொழிகளிலே தேக்கம்; நடையிலே தளர்ச்சி; உள்ளத்தில் குன்றிய உணர்ச்சி! இத்யாதி கோலத்துடன் இக்கோகிலங்கள் காட்சி அளிப்பானேன்? மஞ்சள் பூசிய முகம்; நெற்றியிலே குங்குமம்; மழைக் காலத்து மேகம் போன்ற கூந்திலே செவ்வந்தி மலர்கள்; என்றாலும், குமரிப் பெண்களுக்கே உரித்தான துள்ளலும், மகிழ்ச்சியுமின்றி நடைப் பிணங்கள்போல் இருப்பானேன்?

இருட்பறவைத் தனது இறக்கையை வையகத்தின்மேல் விரிக்கிறது. இருள்; எங்கும் இருள்! அகல் விளக்கை ஏற்றுவிக்கின்றனர் அழகுப் பெண்கள்; விளக்கு சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது; ஆலயத்திலே 'கணீர், கணீர்' என்று மணியோசை எழும்புகிறது! விழிகளிலே நீர் சுரக்க [illegible]ளக்கின் முன்னாலே வணங்கு[illegible]றனர், வீட்டின் திருவிளக்கு[illegible]

[illegible]தாயே! இருட்டை விரட்டும் [illegible]ளி மாதா! தாய்த் திருநாட்டி[illegible] எங் காக்க — தருக்கர் தலையை வீழ்த்த — களம் சென்றுள்ள எங்கள் கணவன்மார்களைக் காப்பாற்றம்மா! எங்கள் இதயத்தின் இருளைப் போக்கி, வாழ்வின் இன்பத்தை அளித்து ரட்சிப்பாய்! தேவி! உலக மாதா! உன் பாதார விந்தங்களைத் தவிர வேறு கதி ஏது எங்களுக்குத் தாயே!"

அவர்களின் அமுத வாய்கள் தொழுதன; குமுத விழிகள் கண்ணீர் சிந்தின!

பாவை விளக்கைத் தொழுது எழுந்தாள் பூவை; சுவை இல்லாக் கரும்பு, அவளுக்குக் கணவன் இல்லாத வாழ்வு! கவைக்குதவாத காவியமாகிவிட்டது அவள் வாழ்க்கை ஏடு! இனியன் அவளது இதயத்தின் மணவாளன்—மறவர் குலத்துக் கோமகன் — வேல் ஏந்தி, பின் [illegible]லேந்தி, மணிமுடி தரித்து, அணி பல பூண்டு, கொலு மண்டபத்தில் நவரத்தின பீடத்திலே அமர்ந்து, புவனத்து மக்களின் இதய பீடத்தைக் கவர்ந்து, கற்றோர் வாழ்த்த, மற்றோர் புகழ, நாட்டில் நலம் கொழிக்க, மக்களின் வாழ்வில் இன்பம் செழிக்க — ஆளுகின்ற மார்த்தாண்ட மன்னனுடைய தானைத் தலைவன்; சேனையின் இதயம்! அவன் போர்க்களத்திலே [illegible]லியெனச் சீறிப் பாய்ந்து கொண்டிருந்த வேளையில்தான், அவனது இல்லத்துக் கிளி—இதயத்தின் ஒளி—அவன் நினைவால் வாடினாள்; வாடிய மலரானாள்; காய்ந்த சருகானாள்! கடிமணம் புரிந்துகொண்டவனின் திருமுகத்தைத் தேடி அலைந்தன அவளது நயனங்கள்!

"வெற்றி வாகை சூடி வருவானோ? அல்லது மாற்றா[illegible]ல்பட்டு மாள்வானோ? விழுப் புண் ஏற்றுப் புழுபோல் துடிப்பானோ? கழுமரத்திலே ஏற்றி, மாற்றார் கொக்கரிப்பரோ?" என்ற திகில் அவள் உள்ளத்தில் அலையென மோதிற்று!

அவனது போர்த் திறமையிலே அவளுக்கு அச்சமில்லை; கச்சையணிந்து அவன் களத்தில் புகுந்து விட்டால், எதிர்ப்பட்டோரின் எலும்புகள் நொறுங்கும்; தலைகள் உருளும்; கரும்புத் தோட்டத்தில் புகுந்த மதயானை என எதிரிகளைத் துரும்பெனத் தும்வசம் செய்வான்; அய்யமில்லை! என்றாலும் போர்க்களமாயிற்றே! வெற்றி, தோல்வி பொதுவாயிற்றே! ஏமாந்திருக்கும் நேரத்தில் மாற்றார் ஏற்றங்கொண்டு அவன் பொன்னுடலைச் சாய்த்து விட்டால்......?

இந்த பயம், தணலென எரித்தது அவளது நெஞ்சத்தை! விழிகளிலே நீர்; கண்ணீர் — அல்ல; அல்ல; இதய வேதனையின் இரத்தத் துளிகள்! அதிலே கடந்த கால நிகழ்ச்சிகள் மின்னின!

∴ ∴ ∴

ஜெயபேரிகை கொட்டுகின்றன; வேழ நாட்டானை வீழ்த்தி வெற்றிக்கொடி நாட்டிய வீரர்களெல்லாம் வீடு திரும்புகின்றனர்; மாடமாளிகை — கூட கோபுரங்களில் மங்கல வாத்தியம்; பட்டி மண்டபங்களிலே நாட்டியம்; சந்து முனைகளிலே சிங்கார கீதம்; தெருவெல்லாம் — வீடெல்லாம் விழாக்கோலம்; மக்களுடைய உள்ளமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம்; மகளிர் கைகளிலே மலர் மாலைகள்; தருக்கரை வீழ்த்தித் தாயகம் திரும்பும் தீரர்களைப் போற்றிப் புகழும் வாழ்த்தொலி விண்ணை எட்டுகிறது!

"நாட்டினரே! பாரீர் போர்க்களத்திலே நாங்கள் பெற்ற விழுப் புண்களை! நாகாக்கத் தெரியாத கசடர்களை வீழ்த்திய எங்கள் கரங்களைக் காணீர்! கேளீர் எங்கள் வீரக்காதையை! 'பளீர், பளீர்' என மின்னிய எங்கள் வேல்களைக் கண்டு வேழ நாட்டு 'வீரர்'கள் வந்த வழியே ஓடினார்கள்! 'கணீர், கணீர்' என எங்கள் வாள் எழுப்பிய ஒலியைக் கேட்டுக் காணீர் எங்கள் முதுகை எனக் கால்கள் பிடரியில்பட பறந்தனர், வேழ நாட்டு 'சூரர்கள்'! வீரர்களா அவர்கள்...? வீணர்கள்! நல்லவர்களே! இவைகளுக் கெல்லாம் காரணம் யார் தெரியுமா? எதிரிகளுக்கு எமன்—எங்களுக்கு நண்பன் — நாட்டின் திருவிளக்கு — பட்டாளத்து வீரர்களின் தளபதி —இனியன்! அவன் வாழ்க! வளர்க அவன் புகழ்!" எனப் போர் வீரர்கள் வார்த்தைகளால் சொல்லவில்லை; அவர்களது விரிந்து பரந்த மார்பும்— வீறு கொண்டு பார்த்த பார்வையும் ஏறு நடையும் இதைத்தான் செப்பின!

முல்லை மலர்களையும் மல்லிகைச் சரத்தையும் வாரி இறைத்தனர் வேல் தாங்கிய வீரர்கள் மீது, வேல்விழி மாதர்கள்! தாய் நாட்டு மானத்தை மீட்ட மறவர் குலதிலகம்—தார்வேந்தனின் தளபதி— பொங்கும் கடலைபோல் பட்டாளத்துப் போர் வீரர்கள் பின் தொடர குகைவிட்டுக் கிளம்பிய சிங்கமென நடந்தான் இனியன்! கண்டோரின் இதயத்தை எல்லாம் கொள்ளை கொண்டான்!

வெற்றிவாகை சூடி வந்த வீரனுக்குப் பூவை மாலை சூட்டினாள்; ஏறிட்டுப் பார்த்தான் ஏந்திழையை; இரண்டு ஜோடிக் கண்கள் சந்தித்தன; பூவையின் இதயக் கதவு தானாகத் திறந்து கொண்டது; இனியன் அவளது இதய பீடத்திலே வாடகையின்றிக் குடியேறினான்; அவளோ, அவனுடைய இதய சிம்மாசனத்தில் ஏறிக்கொண்டாள்!

∴ ∴ ∴

காட்சி மாறுகிறது...

மாலை வேளை! மலரின் பூந்தாதைச் சுமந்து வந்தது தென்றல்; சோலைக் குயில் 'கூ கூ'வெனக் கூவியது; இனியன் மாமரத்தின் வளைந்த கிளைமீது சாய்ந்து கொண்டிருந்தான்.

கருமுகில் கூட்டக் கூந்தல் மழைத் துளிகளை சிந்த—ஈர உடை உடலில் ஒட்ட—இடை அசைய—இடையிலிருந்த குடம் அசைய — குடத்திலிருந்த நீர் அசைய—வைத்தடி நோக எடுத்தடி கொப்பளிக்க வருகிறாள் பூவை!

அவன் கரம் குடத்தைப் பற்றுகிறது; அவள் இதயத்திலே காதல் தீ பற்றுகிறது!

விழியால் அவள் அழகை உண்ணுகிறான், அவன்; மொழியால் அவன் இதயத்தைத் தடவுகிறாள், அவள்!

"அத்தான்...!"

"உம்....என்ன என் ரத்தினமே?"

"நான் குளத்திலே மூழ்கி மூழ்கிக் குளித்தபோது உளி கொண்டு செதுக்கிய சிற்பம் போல் காட்சி அளித்துக் கொண்டிருந்த நீங்கள் வாய்விட்டுச் சிரித்ததேன்?"

"கதிரவனைக் கண்டு கமலம் சிரிக்கிறது; வசந்தத்தில் கோகிலம் கூவுகிறது; அதுபோல் நானும் என் இதயத்துக் கமலத்தை—என் வாழ்வின் கோகிலத்தைக் கண்டு சிரித்தேன்...!"

"இல்லை; வேறு எதையோ நினைத்துத்தான் சிரித்தீர்கள்...!"

"நீயேதான் சொல்லேன்; நான் சிரித்ததற்குக் காரணம்...?"

"சொல்லட்டுமா...?"

"சொல்.....என் செல்வமே...... சொல்...!"

"நீண்ட நாழிகையாக நீரிலே குளித்துக் கொண்டிருக்கிறாளே பூவை......அதற்குக் காரணம் அவள் மேனி எங்கும் அழுக்கு போலும், அது கரையத்தான் என்னைக் கரையிலே காக்க வைத்து விட்டு நீரிலே நீந்துகிறாள். இவ்வளவு அழுக்கு படைத்த பெண்ணையா நாம் 'பொன்னே! மணியே!' எனக் கூறிக் காதலித்தோம்......என்ன பைத்தியக்காரத்தனம்..........என நினைத்துத்தானே சிரித்தீர்கள்?"

"சீ! பைத்தியமே......இல்லை! தரம் குறையாத தங்கமாயிற்றே உன் உடல்—அதில் மாசு கற்பிக்க நானென்ன முட்டாளா? பார்வை பழுதுபட்டவனா?..."

"பின்...?"

"நீயே சொல்...!"

"உடலிலே உள்ள ஏதோ ஒரு 'கோளாறை' மறைக்கத்தான் மஞ்சளை அரைத்து அரைத்துப் பூசுகிறாள் பூவை; இந்தப் பாவையைக் கண்டு நமது மனம் பேதலித்து விட்டதே......என்ன முட்டாள்தனம்....என்றுதானே...?"

"உம்...வெள்ளி நிலவில் களங்கம் உண்டு; இந்தப் புள்ளி மயிலில் அதுகூட இல்லையே!"

"பின் நீங்கள் கலகலவென நகைத்ததற்குக் காரணம்?"

"........."

"சொல்லுங்கள் அத்தான்!"

"சொன்னால் என்ன தருவாய்?"

"'இச்' நூறு தருவேன்!"

"அச்சாரம்....?"

"உம்..."

"கோபிக்காதே; சொல்லுகிறேன் இதோ, தடாகத்தின் மலர்களை மொய்க்கின்றனவே வண்டினங்கள்; அவைகள் ஏமாந்ததைக் கண்டுதான் சிரித்தேன்!"

"வண்டுகள் ஏமாந்தனவா? எப்படி?"

"தாமரை பூத்த குளத்தில் முகத்தாமரை தெரிய நீ குளித்துக் கொண்டிருந்த நேரத்தில், அவ்வண்டினங்கள் மலர்களுக்கும் உன் மலர் முகத்திற்கும் வித்தியாசம் தெரியாத காரணத்தால் உன் முகத்தை மொய்த்து ஏமாந்தன! அதைக் கண்டு சிரித்தேன்!"

"குறும்பு!"

"எங்கே பரிசு?"


விற்பனையாகிறது!

நாங்கள் தமிழன்னைக்குச் சூட்டும் முத்தாரம்! இன்பத்தமிழ் இலக்கியக் கருவூலம்!!

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தீட்டிய

தமிழ்ச்செல்வம்

"தேனலைகள்"

விலை ரூ. 1-50

முத்துவேல் பதிப்பகம், 77, மதுரைசாலை, திருச்சி. 8.

விற்பனையாளர்களுக்குத் தக்க கழிவு உண்டு

தனிப்புத்தகம் வேண்டுவோர் புத்தக விலையுடன் 25 புதிய காசுகள் சேர்த்து பணவிடை (MO) அனுப்புக

அவனது வலுவான கரங்கள் அவளைத் தழுவுகின்றன. கொழு கொம்பிலே படரும் முல்லைக் கொடியானள் அவள்! மாக்கிளை யிலே கூடுகட்டி வாழும் கிளி பட படவென சிறகடித்துப் பறந்தது; இளம் காதலர்களும் இன்ப லோகத்திற்குப் பறந்து கொண் டிருந்தனர்!

∴ ∴ ∴

காட்சி மாறுகிறது…

மங்கல முரசம் அதிருகிறது! மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பூப்பந்தல்; அப்பந்தலின் கீழே மணமேடை; அந்த மேடையிலே இனியனும், பூவையும்; பெற்றோரும் உற்றாரும் வாழ்த்த இனியன் மணமாலை சூட்டுகின்றான்; மணமகள் இத யத்தில் மகிழ்ச்சி துள்ளி விளை யாட தரையை நோக்குகிறாள்; அவள் விழிகளிலே கண்ணீர்! ஆனந்தக் கண்ணீர்! அல்ல; அல்ல; இதய இன்பத்தின் தேன் துளிகள்!

∴ ∴ ∴

காட்சி மாறுகிறது…

பத்து மாதம் சுமந்துபெற்ற சித்திரை நிலவு அவள் மடியில்!

"அத்தான்! கத்து கடல் முத்து ஈடாமோ நம் செல்வனுக்கு?"

"மழலை மொழி பேசும் பசுலைக்கு இவ்வையகமே ஈடில்லையே!"

"பார்த்தீர்களா? நமது பார்த்திபன் பொக்கை வாய் திறந்து இளஞ் சிரிப்பு சிந்து[illegible]தை!"

"ஆமாம், கண்ணே! குழந்தைகள் சிரித்தால் இந்தக் குவலயமே சிரிக் கும்! ஆனல் எனக்கு அவன்மேல் கோபம் தான்!"

"கோபமா? ஏன்? மோவா அரும்பு—தாவா சிறு மீனுயிற்றே நமது செல்வன். சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யுமே அவனது சிரிப்பொலி! அவன்மீது நீங்கள் கோபம் கொள்ள உங் கள் இதயம் இரும்பாகி விட்டதா?"

"பின்னென்ன? அவன் பிறந்த பின் என் பக்கமே நீ திரும்புவ தில்லையே! என்னை மறந்தே விட் டாய்! என்னிடமிருந்து என்னு டையவளைப் பிரித்தவன்மீது கோபம் வராதா என்ன?"

"ஓ! அதுவா…? உம், கையை விடுங்கள். குறு விழிகளைத் திறந்து செல்வன் பார்க்கிறான்!"

∴ ∴ ∴

காட்சி மாறுகிறது…

போர் முரசு கொட்டுகிறது! 'போர்! போர்!' என்ற குரல் எங் கும்! 'வேளை வந்து விட்டது; நமது வாளுக்கு வேலை வந்து விட்ட'தென்று காளையரெல்லாம் தோள் தட்டினர். பொக்கை வாய்க் கிழவரும் துள்ளி எழுந் தனர்.

"மகனே! மானம் காக்கும் இனத்தில் உதித்தவனே! இத் தனை நாள் என் இரத்தத்தால் வளர்ந்த நீ, உன் தாய் நாட்டிற் காக இரத்தம் சிந்தப் போர்க் களம் போவாய்! மாதாவின் மானம் காப்பாய்! வெற்றி வாகை சூடுவாய்! 'வெற்றி மாலை' அல் லது 'வீர மரணம்' இரண்டுமே உனக்குப் புகழ் சேர்க்கும்!" [illegible] தனது தனயன்களை வாழ்த்தி அனுப்புகிறது தாய்க்குலம்!



"அத்தான்! சத்தமில்லாமல் முத்த மழை பொழிந்து என் சித் தத்தை கலங்கடித்த உங்களைப் பிரிவது வேதனையாகத்தான் இருக்கிறது! தமிழ் மகளல்லவோ நான்? போர் முரசம் கொட்டு கின்ற நேரத்தில் காதல் பேசு வேனு? உங்களைப் பிரிவதால் சாதலே எனக்கு ஏற்பட்டாலும் கவலை இல்லை; தாயகத்தின் மானத்தைக் காப்பாற்றப் புறப் படுங்கள்! வெற்றிக் கொடி நாட் டுங்கள்! திரும்பும்போது தவருது இரண்டு எதிரிகளைப் பிடித்து வாருங்கள் எனக்கு ஏவல் புரிய!" என விடை கொடுத்தனுப்பு கிறார்கள், காதலிகள் தங்களது காதலர்களுக்கு!

மார்பிலே கவசம்; இடையிலே வாள்; கையிலே வேல்; இந்தக் கோலத்திலே காட்சி அளிக்கிறான் இனியன்! அவன் இதயம் பெரு மையால் பூரிக்கிறது; அவன் விழிகளிலே மகிழ்ச்சியின் துள் ளல்! தினவெடுத்த தோள்களுக்கு சரியான வேலை வந்து விட்டதல் லவா? போர் முரசின் ஒலியை விட, வேறு எந்த ஒலி போர் வீரனின் இதயத்தில் இன்ப கீதத்தை இசைக்கும்? அதுவும் இனியன் தளபதியாயிற்றே! மகத்தான பொறுப்பல்லவா? பெருவதற்கரிய பெரும் பாக்கிய மல்லவா? பூவை மாலை சூட்டி ஞள்; ஆரத்தி எடுத்தாள்; நெற்றி யிலே திலகமிட்டாள்; என்றாலும் அவளது இதயத்தின் வேதனை யைக் கண்கள் காட்டிக் கொடுத்து விட்டன!

"தமிழ்ப் பெண்ணே! என் இதயத்தின் கண்ணே! விடை கொடடி என் மாணிக்கமே! புறமுதுகிட்டு ஓடிய தருக்கன் நமது தலைப்புறத்து வாசலுக்கு வந்திருக்கிறானும்; இழித்தானும்; பழித்தானும்; எள்ளி நகையாடினு னும் நம்மை! என்ன நெஞ்சழுத் தம் அவனுக்கு? வெஞ்சமர்க் காட்டில் விளையாடும் தோள் உண்டு நமக்கு என்பதை மறந்தானு? வாழ்வைத் துறக் கத்தான் முடிவெடுத்தானு? அவ னது மணிமுடியை நமது மன் னனின் காலடியில் காணிக்கை யாக்குகிறேன்! அவனது கரி, பரி, ஆள், அம்பு எல்லாவற் றையுமே நான் கூண்டோடு கொண்டு வருகிறேன்! அந்தப் புரத்து அப்சரசுகளை நமது மகா ராணியாருக்கு கைகட்டி வாய் பொத்தி சேவகம் செய்ய அழைத்து வருகிறேன். அவ னது தலை நமது தாயகத்தின் மண்ணை முத்தமிடட்டும்! கண்ணே! நல்ல விடை கொடு! ஒரு வேளை என் உடல் சாயுமா னல், கையிலே வாள் கொடுத்து, தாய் நாட்டின் மானம் காக்க நமது வீட்டின் விடி வெள்ளியை —கோல நிலவை — நமது பச லையைக்கூட போர்க்களத்திற்கு அனுப்பிவை!"

இனியன் விடைபெற்றான் பூவையிடமிருந்து. மொழியால் அல்ல; விழியால்!

முரசம் 'போர், போர்' என முழங்குகிறது! போர் வீரர்கள் 'எதிரிகள் எங்கே?' என முழக்க மிட்டுச் செல்லுகின்றனர். இனி யன் தோள்தட்டிப் புறப்பட் டான்; இனி மாற்றார் தாள் பணி வர் என முழங்கினர் மக்களெல் லாம்!

∴ ∴ ∴

ஜெயபேரிகை ஒலிகேட்கிறது! "வெற்றி! வெற்றி! மாற்றானை வீழ்த்தி விட்டனர் நமது வீரர் கள்! தோற்றான் — தோற்றான் தருக்கன்!"—மங்கல ஒலி பூவை யின் காதில் விழுகிறது; அவள் நினைவுப் பின்னல் அறுகின்றது; புன்னகை தவழுகிறது இதழ் ஓரத்தில்; 'தாம் தீம்' என கால் கள் தாளம் போடுகின்றன; இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது; வாயிற் புறத் திலிருந்து உள்ளே செல்லு கிறாள்; விளக்கைத் தூண் டுகிறாள்; வேகமாக மலர் மாலை பின்னுகின்றன கரங் கள்; மண நாளில் அணிந்து கொண்ட புட வையை எடுத்து அணிந்து கொள்கிறாள்; குங்குமத்தை முகத்திலே அப்பிக் கொள்ளுகி றாள்; வாசலுக்கு ஓடுகிறாள்; மீண் டும் உள்ளே வருகிறாள்; நிலைக் கண்ணாடி முன் நின்று தனது அணி மணிகளை சரி செய்து கொள்ளுகிறாள்; மீண்டும் வாசற் புறம் — இப்படியே வீட்டிற்கும் வாசலுக்குமாக நடமாடிக் கொண் டிருக்கிறாள்.

வெற்றி வாகை சூடிய வீரர் கள் நகரத்துள் பிரவேசிக்கின் றனர். மங்கல வாத்தியம் முழங்கு கிறது; மலர்களை வாரி இறைக் கின்றனர் மக்கள். எதிரிகளின் யானையும், சேனையும் பின்தொடர வேழ நாட்டு வேந்தனை சங்கிலி யால் பிணைத்து இழுத்து வரு கின்றனர். என்றாலும் போர் வீரர் களின் முகத்திலே மகிழ்ச்சி இல்லை; வேதனை வடிவாய் — வினாக்குறியாய்க் காட்சி அளிக் கின்றனர்.

பூவை வெற்றி மாலை ஏந்தி வாசலிலே காத்திருக்கிறாள்; அவ ளது விழிகள் இனியனைத் தேடுகின்றன. வீரர்கள் வரு கின்றனர்; அவள் வீட்டின் வாசலிலே நிற்கின்றனர்; பல் லக்கு இறங்குகிறது; அதில் துணியால் போர்த்திய உடல்; முகத்தை மறைத்த திரை விலகு கிறது; பூவையின் பார்வை அதன் மேல் பதிகிறது!

குன்றுபோல் இனியனின் உடல் சாய்ந்து கிடக்கிறது! எதிரிகளின் சிரம் கொய்த கரங்கள் முடங்கிக் கிடக்கின் றன! மூடி இருந்தன கனல் கிளம்பிய கண்கள்! வெற்றி எக்காளமிட்ட வாய் அடைபட் டுக்கிடக்கிறது! பூவையின் நய னங்கள் அகல விரிகின்றன… கரங்களிலே சிறையிருந்த மாலை விடுதலை பெறுகிறது….நெடு மரம்போல் கீழே சாய்கிறாள்! பேச்சில்லை; மூச்சில்லை; கதற வில்லை; கண்ணீர் வடிக்கவில்லை!

பின் விழிக்கிறாள்!

விழிகள் இனியன் முகத்திலே பதிகின்றன!

கண்களிலே ஒரு சூன்ய ஒளி!

மணந்த மணவாளன் பிண மாகக் கிடக்கிறான்; என்றாலும் மனைவி கதறவில்லை; கண்ணீர் வடிக்கவில்லை!


"துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது — வாயை ஊமையாக்கி விட்டது — கண் களின் ஊற்று வற்றிவிட்டது…"

—வயோதிகர் கூறினர், அவள் மௌனத்திற்குக் காரணங்களை.

மூத்தோர் கூறினர், "வாய் விட்டுக் கதறவில்லையானல் — கண்கள் நீரைக் கொட்டவில்லை யானல் — இதயம் வெடித்துப் பூவை மாள்வாள்!…கண்ணீர் தான் கவலையைக் கரைக்கும் — இதயத்தின் சுமையைக் குறைக் கும் — ஆகவே அவள் அழ வேண்டும்! இல்லையேல் துக்க பளுவால் கனத்துப்போன இத யம் வெடித்து பூவை மாள் வாள்! அவள் கணவனுடன் உடன்கட்டை ஏறுவது அவளது கவலைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி தான். ஆனல் பிறந்த உடனே தந்தையை இழந்த குலவிளக்கு— தாயையும் உடன் இழப்பது மாபெரும் துன்பம்! பின் அப் பசலையின் கதி என்ன? அவள் கதறிக் கதறி அழ வேண்டும்… அது கவலையைக் குறைக்கும்… பின் அவள் உயிர் மீளும்" என்று.

"இனியனின் வீர தீரத்தை— எதிரிகளின் களத்திலே அரிமா வென நுழைந்து விளையாடிய வித்தையைப் பாடினல், அது கேட்டு இரும்பாகிவிட்ட அவ ளது இதயம் இளகும்; பின் கண்

[தொடர்ச்சி பக்கம்—6



# மனிதனின் கதை

பி. சி. கணேசன்

## 22. 'குணசீலர்' அரேலியஸ்

அன்புள்ள மாதவி,

கிறிஸ்துமஸ் — பொங்கல் விடுமுறைக்குப் பின் இப்போது தான் மீண்டும் உன்னோடு தொடர்பு கொள்ளுகிறேன். புது ஆண்டு நல்ல எதிர்காலத்தை உனக்கும் எனக்கும் உலகுக்கும் நல்க வேண்டுமென விழைகிறேன். கிறிஸ்துவின் மரணத்துக்குப்பின் உலகில் மனிதன் வாழ்ந்து, இன்று எய்தியுள்ள நிலையை இனிவரும் கடிதங்களில் உனக்கு எழுதுவேன்.

ரோம், நகரமாகப் பிறந்து, நாடாக வளர்ந்து, சாம்ராஜ்யமாகச் செழித்த கதையைச் சென்ற கடிதங்களில் சொன்னேன். ஜூலியஸ் சீசர் சர்வாதிகாரியாக வாழ்ந்தான். நாட்டுப் பற்றுமிக்குடையவனாக இருந்தாலும், நல்லபடியாக நிர்வாகம் செய்ய எண்ணியதாலும் அவனால் பல நன்மைகளை மக்களுக்குச் செய்ய முடிந்தது. அப்படிச் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டாலும், வாதப் பிரதிவாதங்களால் அவன் அமுல் செய்ய விரும்பிய திட்டங்கள் தடைபடாமலும் அவனுடைய சர்வாதிகாரம் அவனுக்குத் துணை நின்றது. சர்வாதிகாரத்தால் நல்லவைகள் துரிதமாக நடைபெறும் என்பது உண்மை! ஆனால் சர்வாதிகாரி நல்லவனாக இருக்கின்ற வரையில்தான் இந்த நன்மையை எதிர்பார்க்கலாம். அவன் தீயோனாக இருந்துவிட்டாலோ....!

இத்தகைய தீயூழுக்குத்தான் ரோம் ஆளாயிற்று. ஜூலியஸ் சீசருக்குப் பிறகு, சீசர் என்ற பட்டத்துடன் ஆண்ட மூன்று மன்னர்கள் திறமைசாலிகளாக இருந்தனர். அடுத்த மூவரில், முதலாமவன் பைத்தியக்காரன்; இரண்டாமவன் முட்டாள்; மூன்றாமவனான நீரோ மன்னனைப் பற்றி—அவனது கொடுங்கோன்மையைப்பற்றி — உண்மையும் பொய்யும் கலந்த எண்ணற்ற கதைகள் உண்டு. ரோம் எரிந்த பொழுது நீரோ ஃபிடில் வாசித்ததாகக் கதையொன்று உண்டு. ஆனால் அக்கதைக்கு வரலாற்றில் ஆதாரமில்லை. வரலாறு கண்ட கொடுங்கோலர்களின் பட்டியலில் நீரோவுக்கு சிறப்பானதொரு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவனுடைய கொடுங்கோன்மையை எதிர்த்து அவனுடைய போர் வீரர்களே புரட்சிக் கொடியை உயர்த்தினர். நீரோவுக்குப் பின், மூன்று கண்டங்களில் பரவியிருந்த மாபெரும் சாம்ராஜ்யமான ரோம் சாம்ராஜ்யம், எந்தப் படைத் தலைவன் பலம் பெற்று விளங்கினானோ அவனுடைய ஆணைவழி நடந்தது. ஒரே ஆண்டில் வெவ்வேறான நான்கு சக்ரவர்த்திகள் ரோம் ராஜ்யத்தை ஆண்டார்கள் என்றால் நிலைமை எப்படியிருந்திருக்கும் என்று நீயே யூகித்துக்கொள்!

ரோம் ராஜ்யத்தைப் பிடித்த நல்லகாலம் கி. பி. 96—ல் 'நேர்வா' என்ற பெயருடைய பலம் பொருந்திய தலைவன் ஒருவன் தோன்றினான். ஆனால் அவன் நீண்டகாலம் ஆளவில்லை. அவனுக்குப்பின் அவனுடைய வளர்ப்பு மகனான டிராஜன் (Trajan) பட்டத்துக்கு வந்தான். அவன் பத்தொன்பது வருடங்கள் ஆண்டான். அவன் காலத்தில்தான் ரோம் சாம்ராஜ்யம் அளவில் மிகப் பெரியதாக இருந்தது. அவனுக்குப்பின் வந்தவர்களும் ஒவ்வொரு துறையில் சிறந்து விளங்கினார்கள். கி. பி. 100-முதல் 180-வரை உள்ள காலம் ரோம் சாம்ராஜ்யத்தின் மகோன்னத காலமாகும். இந்தக் காலத்தின் கடைசி மன்னனும், தலைசிறந்த ஒழுக்கசீலருமான மார்க்ஸ் அரேலியசைப் பற்றி நீ அவசியம் தெரிந்து கொள்ளவேண்டும். ராஜாஜிக்கு மிகவும் பிடித்தமான சிந்தனையாளர்களில் மார்க்ஸ் அரேலியசும் ஒருவர்.

மார்க்ஸ் அரேலியஸ் பெரிய நிர்வாக மேதை; சிறந்த தளகர்த்தர்; மக்கள் சுபிட்சமாக வாழத் தன்னலமின்றி உழைத்த ஒப்பற்ற ஒழுக்கசீலர்; பெரிய தத்துவஞானி. அவர் எழுதி எழுதியுள்ள 'சிந்தனைகள்' (Meditations) என்ற நூல் வாழ்க்கையின் சிறந்த வழிகாட்டியாக உலகச் சான்றோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒழிந்தபொழுதெல்லாம் வாழ்க்கையைப்பற்றிச் சிந்தித்து அவர் எழுதியுள்ள குறிப்புகள் அடங்கியதே அந்நூல். 'வாழ்க்கையின் குறிக்கோள் இன்பமல்ல; இன்ப துன்பங்களால் மாறா மனநிலை பெறுவதே வாழ்க்கையின் குறிக்கோள்!' என்கிறார் அரேலியஸ்.

சிலரைப்போல் பிறருக்கு உபதேசிப்பதோடு அவர் நிற்கவில்லை. தான் உபதேசித்தவைகளை வாழ்ந்து காட்டினார். அதிகாரம் அவருடைய கரங்களில் குவிந்து கிடந்தது. மாபெரும் சாம்ராஜ்யத்தின் செல்வமனைத்தும் அவருடைய காலடியில் இருந்தது. இருந்தும், அவர் ஆடம்பரத்தை வெறுத்தார். எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். சொந்தத் தேவைகளை பெருமளவு குறைத்துக் கொண்டார். உடல் நலம் குன்றியிருந்த நிலையிலும் இரவு வெகுநேரம்வரை கண் விழித்து, நாட்டின் நிலைபற்றிய ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் தானே நேரடி கவனம் செலுத்தினார். உபதேசத்தைச் செய்துவிட்டு பொறுப்பிலிருந்து அவர் ஓடி ஒளிந்து கொள்ளவில்லை. ரோம் ராஜ்யத்துக்கு எதிராக நாகரிகமற்ற காட்டுமிராண்டி இனம் வெளியிலிருந்து படையெடுத்த போது, அவர்களை விரட்டப் பல போர்களில் ஈடுபட்டு வெற்றியும் கண்டார். அவர் உலகிடம் கொண்டிருந்த பற்று தன்னலமற்றதாயிருந்தது. மக்கள் சேவையை அவர் கடவுள் சேவையாக எண்ணினார்.

இப்படிப்பட்ட ஒரு உத்தமரை மக்கள் வாழ்த்தி வணங்கியதில் வியப்பில்லை அல்லவா? அவர் இறந்தபின் அவருக்கு சிலையெடுத்து, கடவுளாகவே அவரை மதித்து ரோம் மக்கள் வழிபட்டனர்.

அசோகன் கட்டிக் காத்தவைகளை அவருடைய மைந்தனால் எப்படிக் காப்பாற்ற முடியவில்லையோ; அதேபோல்அரேலியசின் புதல்வனும் தந்தைக்கு ஏற்ற மகனாக இல்லை. ரோமின் பொற்காலம் மிகக் குறுகியதாயிற்று! கி. பி. 180—ல் அரேலியஸ் இறந்தவுடன் ரோம் சாம்ராஜ்யம் வெளிநாட்டுப் படையெடுப்பாளர்களின் வேட்டைக் காடாயிற்று. ரோம் சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றது. அதன் வீழ்ச்சிக்கான காரணங்களையும் சுருக்கமாகவேனும் நீ அறிந்து கொள்ளுவது அவசியம்.

ரோமானியர்களின் பலமே அவர்களுடைய நாட்டுப் பற்றில்தான் இருந்தது. கிரேக்கர்களுடைய நாட்டுப் பற்று நகர—ராஜ்யங்களை மட்டும் எல்லையாகக் கொண்டிருந்ததால், நகர—ராஜ்யங்களுக்கிடையே ஏற்பட்ட பூசல்கள் அவர்களுடைய ஒற்றுமையைக் குலைத்தது. ஆனால் ரோமானியர்களின் நாட்டுப் பற்று விரிந்து பரந்த அவர்களுடைய சாம்ராஜ்ய எல்லையைப் பாதுகாத்து பலத்தையளித்தது. தவிர ரோமானியர்கள் நிர்வாகக் கலையில் சிறந்து விளங்கினார்கள். அவர்களுடைய சாம்ராஜ்யத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் நல்ல ரஸ்தாக்களால் இணைத்தார்கள். இதனால் போக்குவரத்து வசதிகள் செம்மையாக அமைந்ததுடன், ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு வேண்டியபொழுது படைகளை நடத்திச் செல்லுவதும் சுலபமாயிற்று, பொதுவான சட்டங்களும் உரிமைகளும் சாம்ராஜ்யமெங்கும் ஒழுங்காக அமுல் செய்யப்பட்டன. அதனால் மக்களுக்கு அரசாங்கத்தினிடம் நம்பிக்கையும், பாதுகாப்பு உணர்ச்சியும் ஏற்பட்டன. ரோமானியக் குடியுரிமை (Roman Citisenship) பிரிட்டன் வரையில் போற்றிப் பாதுகாக்கப்பட்டது. அன்று ரோமானியர் வகுத்த சட்ட முறை இன்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றின் அடிப்படையாக இருப்பதிலிருந்தே அந்த சட்டங்களின் உயர்வை நீ அறியலாம். இப்படி நல்ல அரசியல் நிர்வாகம் இருந்ததாலேயே ரோம் ராஜ்யத்தின் தலைமைப் பதவிக்குப் போட்

[தொடர்ச்சி பக்கம்-


## 'தென்னகம்' காண்போம்!

அன்பு நண்பரும் ஆற்றல் மிக்கவரும் இயக்கத்துக் காவலர்களில் ஒருவருமான தோழர் மதியழகன் அவர்களின் அரிய முயற்சிக்கோர் எடுத்துக்காட்டாக எண்ணப் பூக்காடாகப் பவனி வரத் தொடங்கியிருக்கிறது, 'தென்னகம்' தீந்தமிழ் ஏடு! திராவிடர் விடுதலைப் போருக்கு மற்றுமொரு படைக்கலன்! மொத்தத்தில் தேன் கூடு!

மாணவப் பருவத்திலிருந்தே தியாக முத்திரைகள் பெற்று இயக்கத்தை வளர்த்த பெருமையால் நண்பராவார் மதியழகன் அவர்கள்.

கணியூர், நமது கழகத்திற்கெனத் தந்த கண்மணி! அண்ணாமலைநகர் விடுதலை அணிக்குத் தந்த தளநாயகர்களில் ஒருவர்--என மனமார வாழ்த்தி மதியழகனைத் தாயகம் வாரி அணைத்துக் கொள்கிறது!

உள்ளக் குமுறலையே அவரது உதடுகள் உச்சரிக்கும். இதழ்களில் இனிப்பும், இதயத்தில் பெருகசப்பும் கொண்டவர்களை இடரியெறிகின்ற பேராற்றல் படைத்த வீரர் அவர். அவரது கவின்மிகு கருத்துக்களைக் கிழமைதோறும் தமிழகம் சுவைப்பதற்குத் தென்னகம் உதவுமென நம்புகிறோம்.


திடகாத்திரமான எழுத்தோட்டம்! பலஹீனர்களைத் தெம்புள்ளவர்களாக்கும் வீறுமிக்க வாசகங்கள்! தடைபடாத் தமிழ் நடை! தயக்கமின்றிப் பீறிட்டெழும் தயவு தாட்சண்யமற்றக் கொள்கைப்பற்று! மதி அவர்களின் 'தென்னக' இதழில் இவைகளைச் சுவைக்கலாம்; இன்பம் பெறலாம்; ஊக்கமும் உணர்வும் கொண்டு விடுதலை வீரனாக நிமிர்ந்து நிற்கலாம்!

ஒவ்வொரு கழகத் தோழரும் படித்துத் தீரவேண்டிய ஏடு, 'தென்னகம்'!


வீரம்பெற, விவேகம் பெற, அடிமைத்தனத்தைக் கெல்லி எறிய ஒவ்வொருவர் கையிலும் 'தென்னகம்' இருந்திட வேண்டும். "வாழ்க தென்னகம்! வளர்க தென்னகம்!" என உறவு முறையோடு வாழ்த்துகிறோம்! குடும்பப் பாசத்தோடு! தென்னகத்தின் கையைக் கோர்த்துக் கொண்டு நாமும் விடுதலைப் போர்க்களத்தில் நடைபோடுகிறோம்!

கிடைக்குமிடம்:

"தென்னகம்", சென்னை-1.



சங்கீத டைரக்டர் சி. ராம் சந்திரா கட்டுப்படுத்தியக் கூட்டத்தை பண்டித நேருவால் கட்டுப்படுத்தமுடியாத பரிதாபக் காட்சி!



சினிமா நடிகைகளின் மத்தியிலே 'சினிமாக் கட்சியின்' தலைவரல்ல; பண்டித நேருதான்!

## எது சினிமா கட்சி?...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

பிறகுதான் மகுடி கேட்ட ராகம் போல கூட்டம் கட்டுக்கு வந்ததாம்.

ஆனல் அந்த இசை நிகழ்ச்சி முடிந்த மறுகணமே கூட்டத்திலே குழப்பம் குடிபுகுந்து விட்டது.

பண்டித நேருவே முயன்றும் கூட்டத்திலே புகுந்து கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் கூட்டத்தை அடக்க முடியவில்லையாம்.

சி. ராம்சந்திராவின் இசைக் கச்சேரி செய்த சாதனையை பண்டித நேருவின் நாவன்மையால் சாதிக்க முடியாமற் போய்விட்டதாம்!

பிறகு போலீசார் தடியடிப் பிரயோகம் நடத்த; அதன் காரணமாக பெண்களும் குழந்தைகளும் உட்பட 80 பேர் காயமடைந்திருக்கின்றனர். அவர்களில் பத்து பேர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றனர்!

—இதற்கான படங்களையும் இந்த இதழிலே வெளியிட்டிருக்கிரோம்!

நமது மாநிலத்தைத்தான் எடுத்துக் கொள்வோமே; பட உலக நிகழ்ச்சிகளிலே அதிகம் கலந்து கொள்வோர் யார்?

கனம் அமைச்சர்கள்தான்!

'பதிபக்தி' சினிமாப் படத் துவக்க விழாவிலே கலந்து கொண்டது யார்?

கனம் காமராசர்!

அந்தப் படம் பிரத்யோகமாகத் திரையிடப்பட்டபோது கலந்து கொண்டது யார்?

கனம் காமராசர்!

அருணசலம் ஸ்டுடியோவைத் திறந்து வைத்தது யார்?

கனம் பக்தவத்சலம்!

நடிகர் தினத்திலே கலந்து கொண்ட அமைச்சர்கள் யார்?

கனம் சுப்ரமணியம்; கனம் பக்தவத்சலம்!

'எனக்கு சினிமாப் படத்திலே நடிப்பதற்கு ஆசைதான்' — என்று உள்ளக் கிடக்கையை ஒளிக்காமல் வெளியிட்டது யார்?

கனம் பக்தவத்சலம்!

—இப்போது கூறுங்கள்; சினிமாக்காரர்களை வரவழைத்து அரசாங்கத் திட்டங்களுக்கு உபயோகித்துக் கொள்வது சினிமாக் கட்சியா?.........சினிமாக்காரர்களின் நிகழ்ச்சிகளிலே அடிக்கடி கலந்து கொள்ளும் அமைச்சர்களின் கட்சி சினிமாக் கட்சியா?....அல்லது சினிமாத் துறையிலே பணியாற்றுபவர்களில் சிலரை அங்கத்தினர்களாகக் கொண்டிருக்கும் கட்சி சினிமாக் கட்சியா?

எது சினிமாக் கட்சி?

(அடுத்த இதழில் முடியும்)



நேருவுக்குப் பக்கத்தில் நாகபுரி காங்கிரஸ் மேடையிலிருப்பது டிட்டோவல்ல; பிரபல கதாநாயகர் தேவ் ஆனந்த்!


# கண்ணதாசன் கவிதைகள் - வெளியீட்டு விழா

1-2-59 ஞாயிறு மாலை 5 மணிக்கு

சென்னை - வண்ணை, தியாகராயர் கல்லூரி அரங்கில் நடைபெறும்.

தலைவர் : பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார் எம். ஏ., எல். டி. அவர்கள்

வெளியிடுபவர் : **அறிஞர் அண்ணு** அவர்கள்

உரை நிகழ்த்துவோர்:

நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.,
கலைஞர் கருணநிதி எம். எல். ஏ.,
வழக்கறிஞர் வி. பி. ராமன் பி. எஸ். சி., பி. எல்.,
இராம. அரங்கண்ணல்,
இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்,
நடிகமணி டி. வி. நாராயணசாமி,
க. அறிவழகன் எம். ஏ.,
திராவிட மொழி நூலார் ஞா. தேவநேயப்பாவாணர்,
புலவர் மயிலை சிவமுத்து,
எம். சுந்தரம் எம். ஏ., எம். ஓ. எல்., எம். லிட்.,
தணிகை உலகநாதன்,
கோ. வில்வபதி.
அன்பு கணபதி,
கவிஞர் கம்பதாசன்,
முரு. சேதுராமன்,
அரு. இராமநாதன்.

விழாத் தொடக்கத்தில் கண்ணதாசன் அவர்களின் பாடல்களை முத்தமிழ்க் கலையரசு டி. ஆர். மகாலிங்கம், ஏ. எம். ராஜா, திருமதி ஜமுனராணி, டி. எஸ். பகவதி முதலியோர் பாடுவர். இசை அமைப்பாளர்கள் திருவாளர்கள் விசுவநாதன்—இராமமூர்த்தி குழுவினர் இன்னிசையுண்டு.

விழா அரங்கில் "கண்ணதாசன் கவிதைகள்" விற்பனைக்குக் கிடைக்கும். விலை ரூ. 2-50

வெளியிடுவோர் : காவியக் கழகம், 43, கலவச்செட்டித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-1.

# மலர் மணம் நுகர்ந்தோர்!



"அருமை நண்பர் கலைஞர் 'கருணாநிதி அளித்த 'முரசொலி' பொங்கல் மலர் ஏற்கனவே பாரம் தாங்காத அவரது வெற்றிப் பாகையில் மேலும் ஒரு வண்ணச் சிறகு என்று சொல்லலாம்!"

—'தென்னகம்'

"அறிஞர் அண்ணாவின் 'நகை விடு கலை' மலருக்கு சிகரம் அமைக்கிறது.........மு. க. வின் 'இளங்கோ துறவு', இந்திரஜித்' — இரண்டும் மலருககு சிறப்பூட்டுகின்றன...."

—மா. பொ. வேதாசலம், மாதவரம்

★

"தாயகத்தின் விடுதலைக்கான அறப்போரை எதிர்நோக்கி இருக்கும் வீரர்களை வீரத் தாய்மார்களும், அன்பு மனைவியர்களும் விடைகொடுத்து அனுப்பும் காட்சி எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கும் வகையில்தான் மேகநாதன் களம் செல்லும் காட்சியை மிகத்திறமையுடன் மலரின் முகப்பில் தீட்டியிருக்கிறார், ஓவியர் மணியம்!"

—கோ. கதிர்வேலு, சேர்த்தலை

★

"அறிஞர் அண்ணாவின் எழிலோவியம் மிக 'நல்ல முறையில் அமைந்துள்ளது. முரசொலி மாறனின் "நாளை நமதே" என்ற கற்பனை நாடகம் என்னைப் புத்துணர்ச்சி அடையச் செய்தது! வருங்கால திராவிடர் விடுதலைப் படைக்கு நல்லதோர் போர்க்கருவி அது!"

—சேரன் செங்குட்டுவன், பாலராமபுரம்

★

"கொள்கை மணம் பரப்பும் மலர் கண்டேன்; கருத்தென்ற தேன்மிக உண்டேன்; புதுமை யுடை பூண்ட 'அண்ணா'வின் ஓவியம் கண்டு களி கொண்டேன்; 'வடநாட்டில் அண்ணா' காட்சிப் படங்கள் சிறப்பாக அமைந்தது குறித்து மகிழ்ச்சி கொண்டேன்; 'நாளை நமதே' என்ற உறுதி கொண்டேன்...."

—பெரிய நாயகம், மதுரை.

★

"நல்ல தாள்—சிறந்த அச்சு— தமிழ் விருந்து! மாற்றாரோடு போட்டியிடும் ஆற்றலை மலரின் ஒவ்வொரு பக்கமும் நினைவூட்டுகிறது!"

—தமிழண்ணால், காரைக்குடி

★

"முரசொலி கண்டேன்; முத்தமிழ்க் காவியங் கண்டேன்; முகிழ்த்திடும் தாமரை மலரில் மொய்த்திடும் வண்டினங்களாய் செந்தமிழ்ச் சுவையும் தேனாய் ஓடக் கண்டேன்!.... நம் திருவிடத்துக்கே தனி மலராய் வந்த முரசொலியின் விலை யென்னவோ இரண்டென்றாலும் இதற்கு இரண்டாயிரம் கொடுத்தாலும் தகுமையா !"

—வெ. ச. இராசன், பெரம்பூர்.

★

## கண்ணீர்.....

[4—ம் பக்கத் தொடர்ச்சி]

கள் நீர் 'சிந்தும்!" என்று பலர் அவன் புகழ் பாடினர்.

தாமரை மலர்களைக் கொய்வதைப்போல் அவன் கரங்கள் எதிரிகளின் சிரங்களைக் கொய்த வீரத்தை — சுற்றி வளைத்தவர்களின் உடலைக் கூறுபோட்ட தீரத்தை — எதிரிகளின் கோட்டைக்குள் புகுந்து கொடி கட்டிய சாதனையை — பல போர் முனைகளில் அவன் பெற்ற விழுப்புண் சரித்திரத்தை — வெற்றிவாகை சூடிய போர்க்களங்களின் எண்ணிக்கையை--அவன் குரல்கேட்டு அண்ட சராசரங்கள் மிரண்ட வேடிக்கையை — பார்வைபட்டு ஓடிய வீரர்களின் வரிசையை— கதை கதையாய்ப் பாடினர்! பயனில்லை . பூவையின் கண்கள் நீரைக் கொட்டவில்லை! பூவை மாள்வதன்றி மீள வழியே இல்லையா?

முடி நரைத்த—வயது முதிர்ந்த —அறிவு நிறைந்த பொக்கை வாய்க் கிழவி ஒருத்தி கோல் ஊன்றி நடந்து — தொட்டிலிலே இன்பக் கனுக் கண்டு கொண்டிருந்த மழலை மொழிச் செல்வத்தை வாரி அணைத்துவந்தாள்; பூவையின் மடியிலே வைத்தாள்.

குறுகுறுத்த கண்கள் தாயைக் கண்டன...பிஞ்சுக் கரங்கள் அன்னையின் மென்உடலை வருடின... இதழிலே புன்னகை!

"...ம்...மா..."—கிளி கொஞ்சிற்று! இக் குயிலோசை கேட்டுப் புயலில் சிக்கிய படகாய்— தூண்டிலில் சிக்கிய கயலாய்— தவித்துக் கொண்டிருந்த பூவையின் பூவிழிகள் பூமாலைமீது படர்ந்தன! ஒரே கணம்தான்; அவள் விழிகள் நீர்வீழ்ச்சிகளாயின!

கண்ணீர்! கண்ணீர்! கண்ணீர்...!

பூவை மீள்வாள்...மீள்வாள்....!

கண்ணீர்! கண்ணீர்!

இக்கண்ணீர் இதய வேதனையின் இரத்தத் துளிகளோ அல்லது இதய இன்பத்தின் தேன் துளிகளோ அல்ல...

பாசத்தின் ஊற்று!

நேசத்தின் நீரோடை!!

இவ்விதழின் முகப்போவியம்

அன்பளிப்பு:

திருச்சி பாண்டுரங்கன்

## மனிதனின் கதை ..

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் இருந்தாலும் சாம்ராஜ்யம் கட்டுக் குலையாமல் இருந்தது. போக்குவரத்து வசதிகளுடன் நல்ல அமைதியான சூழ்நிலை நிலவியதால் வியாபாரம் பெருகிற்று; செல்வம் வளர்ந்தது. மக்களின் வசதிக்கான குளிக்கும் இடங்கள், சந்தைகள், குடிநீர் வசதி, பொழுது போக்கிடங்கள், போட்டிப் பந்தயங்கள் முதலியனவை அரசாங்கச் செலவிலேயே நிறுவப்பட்டன. ஆனால்....?

இந்த அமைதியான சூழ்நிலையால் விளைந்த ஆடம்பரங்களே ரோம் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாயிற்று. அடிமை வியாபாரம் ரோம் நாட்டின் சாபக் கேடாயிற்று. பெரிய வேலையிலிருந்து சிறிய வேலைவரை எல்லாவற்றிற்கும் அடிமைகளே பயன்படுத்தப்பட்டனர். அரேலியஸ் காலம்வரை அடிமைகள் எவ்வித உரிமையும் பெற்றிருக்கவில்லை. படிப்படியாக அவர்கள் படையிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். வேற்று நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டு அடிமைகளாக நடத்தப்பட்ட அவர்களுக்கு ரோம் நாட்டிடம் விசுவாசம் இருக்கக் காரணமில்லை. ஆகவே பலம் பொருந்திய வெளி நாட்டவர்களின் படையெடுப்பால் ரோம் சாம்ராஜ்யத்துக்கு அபாயம் விளைந்தபொழுது நாட்டுப் பற்று சிறிதும் இல்லாத—இருக்க முடியாத—கூலிப் படையால் அந்தப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

ரோமானியர்களோ வரவிருக்கும் ஆபத்து பற்றி எவ்வித கவலையுமின்றி கண்டதே காட்சியாகவும் கொண்டதே கோலமாகவும் வாழ்ந்தனர். நவரசங்களிலும் சிருங்கார ரசமே ரோம் நாட்டில் மேலோங்கி நின்றது. மதுவும் மங்கையருமே மாநில வாழ்வின் இருபெரும் லட்சியங்களாக அங்கே விளங்கின. தாய்க்கும் தாரத்துக்கும் வேறுபாடின்றித் தவித்த தலைவர்கள் பலர்! அரசியல் வளர்க்க வேண்டிய கொலு மண்டபங்கள், சரசவல்லிகளின் சல்லாபக் கூடமாயின. ஒழுங்கும் முறையும் பாதுகாக்க வேண்டிய காவலர்கள் ஒய்யாரிகளின் கைப்பாவையாக மாறியதால் நாட்டிலே குழப்பமும் சூழ்ச்சிகளும் மலிந்தன. தலைவர்கள் ஏந்திழைகளின் ஏடுபிடிகளாகிவிட்ட நிலையில் எண்ணற்ற விலை புயர்ந்த பொருட்களை தங்களின் இதயங் கவர்ந்தவளுக்குக் காணிக்கையாக்கிட முனைந்ததில் வியப்பில்லையல்லவா? தமிழகத்தின் முத்தும் பட்டும் ஏராளமாக ரோம் நாட்டில் இறக்குமதியாவதால் ரோம் நாட்டுச் செல்வமெல்லாம் வெளி நாடு சென்றுவிடுகிறதே என அங்கலாய்த்தானும் ரோம் நாட்டு மன்னன் ஒருவன். பிலினி எழுதிய சரித்திரம் இதைக் கூறுகிறது, மாதவி!

இப்படி ஆடம்பரமாக வாழ்ந்த ரோமானியர்கள் கலையையும் காவியத்தையும் வளர்த்தார்களா என்றால் அதுதான் இல்லை. ரோமானியர்கள் வாழ்க்கையை அனுபவித்த அளவுக்கு எதையும் படைக்கவில்லை. படைப்புக் கலை அவர்களுக்குத் தெரியாத ஒன்றாகவே இருந்தது. மாதவி, பழைய வரலாற்றைத் துருவிப் பார்க்கின்ற பொழுது நாம் பெருமைப்படும் அளவுக்கு ஒரு உண்மை புலப்படுகிறது. ரோமானியர்கள் வாழக் கற்றிருந்தார்களே தவிர; படைக்கக் கற்றிருக்கவில்லை! கிரேக்கர்கள் புத்தம் புதியனவற்றைப் படைத்தார்கள்; ஆனால் வாழக் கற்றுக் கொள்ளவில்லை. புராதனத் தமிழர்கள்தான், புதியவற்றைப் படைத்து இன்பமாகவும் வாழத் தெரிந்திருந்தவர்கள். கிரேக்கர்கள் கலையும் காவியமும் வளர்த்த அளவுக்கு, நிர்வாகக் கலையை வளர்த்துக் கொள்ளவில்லை. ரோமானியர்கள் நிர்வாகத் திறமை பெற்று விளங்கினார்களே தவிர, கலை காவியம் சிறப்புறப் படைக்கவில்லை. நல்ல காவியமும் கலையும் பெருக்கி, நிர்வாகத் திறமையிலும் நிகரற்று விளங்கியவர்கள் தமிழர்களே!

ரோமானியர்கள் கற்பனை வளம் பெற்றிருக்காவிட்டாலும் கட்டிடக் கலையில் சிறந்து விளங்கினார்கள். ரோமானியக் கட்டிட முறை (Roman Architecture) என்ற ஒரு புதிய முறையே தோன்றியது. மதத் துறையில் தங்கள் முன்னோடிகளான கிரேக்கர்களைப் போலவே ரோமானியர்கள் பல தெய்வ வழிபாட்டினைக்கொண்டு, அதற்கான புராணங்களும் புனைந்தனர். வென்ற நாட்டு தெய்வங்களையும் சொந்த நாட்டு தெய்வமாக்கிக்கொண்ட பெருமை ரோமானியர்களுடையது.

கிரேக்கத்தின் கலையையும் காவியத்தையும் தனதாக்கிக் கொண்டு, எகிப்தின் தத்துவ அறிவையும் விஞ்ஞான விளக்கங்களையும் அரசியல் ரீதியில் வெற்றி கொண்ட ரோம், ஆடம்பரத்திலும் கேளிக்கைகளிலும் மூழ்கிக் கிடந்ததால் சீரழிந்து வீழ்ச்சியுற்றது. இந்த சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்ற கதையை உரைநடை இலக்கியமாக்கினான் சரித்திர மேதை கிப்பன். அதையும்படி. எனது அடுத்த கடிதத்தில் மற்றவை.

அன்புள்ள

அகத்தியன்.

அழகு தமிழில் அறிவு நூல்!

## அறுவடை

'திராவிடநாடு' துணை ஆசிரியர்

இராம. அரங்கண்ணல் தீட்டிய

சரித நாவல்.

விலை 1-4-0

சாந்தி நிலையம்,

தபால் பெட்டி: 1. :: வேலூர்

[illegible]ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-2, தமிழ்நாடு